**றுவன்வெல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து றுவன்வெல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் ஏக்கர் வரி ரூபா 21,625 தொகை மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டமை 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது சீராக்கப்படவில்லை.

(ஆ) 205 வேலைகளின் பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 74,926,656 தொகையில் ரூபா 56,387,812 தொகை ஆண்டின் வருமானம் மற்றும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆண்டின் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 56,697,732 தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்குரியதாக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 40,701,447 தொகை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்குரியதாக செலுத்தப்பட்ட ரூபா 29,558,412 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) செலுத்த வேண்டிய ஏக்கர் வரி ரூபா 209,053 ஆக இருந்த போதிலும், ரூபா 77,026 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக அறவிட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 132,027 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 46,510 தொகை மற்றும் பெற வேண்டிய வியாபார வரி ரூபா 47,400 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) கட்டிட விண்ணப்பக் கட்டணம் மற்றும் விளையாட்டரங்கு வாடகைக்கு வழங்கிய கட்டணமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 யூலை வரையான காலப்பகுதிக்குரியதாகக் கிடைத்த ரூபா 624,613 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 11 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 132,325,909 ஆகவும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 114,307,707 ஆகவும் காணப்பட்டமையால் ரூபா 18,018,202 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 276,212,099 ஆக இருந்த போதிலும், மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 275,337,038 ஆனமையால் ரூபா 875,061 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,981 கூட்டுத்தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,147,302 வரை அதிகரித்திருந்ததுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 27,991,629 ஆகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 685,489 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

ரூபா 1,484,025 பெறுமதியான 02 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விரிவான பட்டோலை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.4 இணங்காமைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) | 13,829 | 10 சந்தர்ப்பங்களின் பேது வழங்கப்பட்ட முற்பணம் 14 நாட்கள் முதல் 77 நாட்கள் வரை தயாரித்து தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | 625,651 | 2006 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 21,354 | கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தை விஞ்சிய 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571 | 4,888,380 | 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மீளச் செலுத்தப்படாத ரூபா 4,458,377 தொகையான நானாவித வைப்புக்கள் மற்றும் ரூபா 430,003 தொகையான கேள்வி பிணைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1646 | - | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் 20 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை பல வருட காலமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,853,382 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,849,459 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 3,288 | 3,288 | 3,543 | 1,516 | 3,488 | 3,488 | 4,351 | 2,185 |
| வாடகை | 9,362 | 7,338 | 6,879 | 3,002 | 6,211 | 6,211 | 7,042 | 1,670 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 370 | 250 | 393 | 77 | 320 | 320 | 427 | 94 |
| ஏனைய வருமானம் | 3,455 | 8,499 | 8,499 | - | 3,371 | 3,371 | 4,969 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 8 சதவீதம், 6 சதவீதம் மற்றும் 146 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 27 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தாது புறக்குணிக்கும் போது உரிய இடத்தின் உரிமையாளரின் ஆதனங்களை தடை செய்தேனும் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 01 வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை ஆதன வரி ரூபா 841,933 மற்றும் ஏக்கர் வரி ரூபா 192,531 தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

பொதுச் சந்தையின் இறைச்சிக் கடை மற்றும் மீன் கடை என்பவற்றை வாடகைக்கு வழங்கியமையால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 833,264 தொகையான நிலுவை வாடகை காணப்பட்டது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 77,398 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 60,292 தொகையான வியாபார வரி என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(4) ஆம் பிரிவின் பிரகாரம் வழக்குத் தொடர்ந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

**(அ) அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கான கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மூலதனப் பெறுமதியில் 0.5 சதவீத வரியை அறவிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறான காணி தொடர்பான மெய்மையாய்வு மேற்கொண்டு வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட போஸ்டர், கட்டவுட் மற்றும் பெனர்கள் தொடர்பாக கண்டறிந்து பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் அறிவித்தல் பதாதைக் கட்டணம் செலுத்துமாறு அறிவித்தல் அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 81,950 தொகையான வருமானம் அறவிட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

பல்வேறு நிறுவனங்களிலிருந்து குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,440,212 தொகை உரிய பணிகளில் ஈடுபடுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 18,089,500 செலவில் இதல்பொல கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு சபைக்கு இடமொன்று காணப்படாமையினால் தனியார்காணியொன்றில் அகற்றப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமாக கலிபவுசர் ஒன்று காணப்பட்ட போதிலும், மலக் கழிவுகளை அகற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று காணப்படாமையின் காரணமாக சேவை பெறுனர்களுக்கு மலக் கழிவுகளை அகற்றும் வசதிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது. தற்போது பேணிச் செல்லப்படுகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கான நீர் வசதிகள் மற்றும் மூன்று சுற்று மின்சாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஆண்டு 2030 இன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்தல் தொடர்பாக சகல விரிவாக தெளிவுபடுத்தாதிருந்ததுடன் குறித்துரைக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய பணிகள் இடம்பெற்றிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய வரி ரூபா 103,521 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பணியடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து பல வருட காலமாக அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 267,283 தொகையினை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 904,174 பெறுமதியான வாகனம் மற்றும் 04 இயந்திரங்கள், பெறுமதி குறிப்பிடப்படாத கெப் வண்டி மற்றும் ட்ரேலர் என்பன பலவருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அந்த வாகனம் மற்றும் இயந்திரங்களை அகற்றுமாறு 2016 இன் பொருள் மெய்மையாய்வு சபை சிபாரிசு செய்திருந்த போதிலும் பதிவுச் சான்றிதழ் உள்ளடங்கலாக சட்டரீதியான பதிவேடுகள் காணாமல் போனமை அல்லது வாகனத்தை வழங்கிய நிறுவனத்திலிரந்து உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற காரணங்களால் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை**

பொதுச் சந்தைத் தொகுதியின் பின்பக்கம் இறைச்சி மற்றும் மீன் கடைகளுக்காக 06 கடைகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 02 கடைகள் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 மே மாதம் வரை மூடப்பட்டிருந்தமையின் காரணமாக சபைக்கு அறவிடக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 03 செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 105,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும், 21 செலவின விடயங்களின்

நிதிஏற்பாடுகளில் 10 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்கு இடையிலும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 10,962,337 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 07 செலவின விடயங்களுக்குரிய பாதீட்டு நிதிஏற்பாட்டை விஞ்சி 04 சதவீதம் முதல் 411 சதவீதம் வரை ரூபா 45,904,403 செலவிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் காணப்பிக்கப்பட்ட பிழைகள் சரிசெய்யப்படாமை |
| | (ii) நாட்குறிப்புக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் தெளிவாக இல்லாமை |
| | (iii) பட்டோலைகள் கணக்குகளுடன் இணங்காமை |
| | (iv) பேரேட்டுக் கணக்குகள் சரியாக தயாரிக்கப்படாமை |
| | (v) பொது வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பாக வருடாந்தம் பதிவேடு பேணப்படாமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்புக் காணப்பட்டமை |
| | (ii) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | (i) நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை இடம்பெறாமை |
| | (iii) சபை பயன்படுத்துகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |